செய்தி வெளியீடு எண்:011 நாள் :04.01.2014

## மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் மண்டல அளவிலான இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்களின் ஆய்வு கூட்டம் குறித்த பத்திரிக்கை செய்தி

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி 03.01.2014 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மண்டல அளவிலான இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்களின் ஆய்வு கூட்டத்தை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் நடத்தினார்கள்.

- இவ்வாய்வுக் கூட்டத்தில் வாரியத் தலைவர், உறுப்பினர் செயலர், மண்டல அளவிலான இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள், கோவை மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அதிகாரிகள் வாரிய அலுவலகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தனது செயல்பாடுகளை செம்மை படுத்தும் நடவடிக்கையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி மூன்று அடுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

- இன்று நடந்த ஆய்வு கூட்டத்தில் இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட பொறியாளர்கள் தங்களது மண்டல மற்றும் மாவட்ட அளவில் செய்து வருகின்ற பணிகள் குறித்து மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

- மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் 19.12.2013 அன்று ஆய்வு மேற்கொண்ட பிறகு பல தொழிற்சாலைகள் இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்களாலும் மாவட்ட பொறியாளர்களாலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் வருங் காலங்களில் பொறியாளர்கள் ஆய்வினை மேற்கொள்ளும் பொழுது தொழிற்சாலைகள் அமைத்துள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் காற்று மாசு தடுப்பு சாதனங்கள் நாள்தோறும் தொடர்ந்து

இயங்குகின்றனவா என கண்டறியும் வகையில் ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- தொழிற்சாலைகள் புதிதாக ஏதும் எந்திரங்களை நிறுவியுள்ளனவா எனவும் சென்ற முறை ஆய்விற்கு பிறகு தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இரவு நேரங்களிலும் இயக்கி உள்ளனவா என்பதையும் கண்டறிய வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளான 17 வகைப்பாடுள்ள அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை முனைப்பாக ஒவ்வொரு மாதமும் கண்காணிப்பது, மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட அலுவலகங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து மாவட்ட அலுவலகங்களின் செயல்பாடுகளை முடுக்கி விடுவது, மாவட்ட அளவிலான ஆய்வகங்களை கண்காணித்தல் போன்ற பல்வேறு பணிகள் வருங்காலங்களில் செம்மையாக நிறைவேற்ற வேண்டும் எனவும், 17 வகைப்பாடுள்ள தொழிற்சாலைகளை மாதம் ஒரு முறை ஆய்வினை மேற்கொண்டு ஆய்வறிக்கையினை தலைவர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும், இவ்வகை தொழிற்சாலைகளால் தங்களது மண்டலத்தில் மாசு ஏற்படுவதில்லை என்பதை இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள்.

- வாரியம் வழங்கியுள்ள இசைவாணையில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வரையரைகளை மீறும் எந்த ஒரு தொழிற்சாலை மீதும் மண்டல மற்றும் மாவட்ட அளவில் செயல்படும் பொறியாளர்கள் சட்ட பூர்வமான நடவடிக்கை எடுத்து அந்த தொழிற்சாலைகள் மாசு ஏற்படுத்தாத வகையில் செயல்படுத்துவதற்கான முனைப்பான பணிகளை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள்.

- இந்தியாவிலேயே முதன் முறையாக சாயப்பட்டறைகள் மற்றும் தோல் தொழிற்சாலைகள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைபாட்டினை எட்ட வேண்டும் எனவும், அம்மாதிரியான

கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைப்பாட்டினை எட்ட வரலாற்றிலேயே முதன் முறையாக திருப்பூரில் உள்ள 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.**179.34** கோடி அளவிற்கு வட்டியில்லா கடனுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என தெரிவித்துக் கொள்கிறேன். இதனடிப்படையில் பல்வேறு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைபாட்டை அடையக்கூடிய சுத்திகரிப்பு முறைகளை செயல்படுத்தியுள்ளதாக மண்டல/மாவட்ட பொறியாளர்கள் தெரிவித்தார்கள்.

- இவை தொடர்ந்து இயக்கப்படுகின்றனவா, சுத்திகரிக்கப்படாத அல்லது சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற்றப்படுகின்றதா எனவும், ஆய்வுகளை மேற் கொண்டு சுத்தகரிப்பு நிலையங்களை சரிவர இயக்காத தொழிற்சாலைகள், தவறு செய்யும் தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- மேலும் வாரிய அலுவலகத்திலிருந்தும், அரசிடமிருந்தும் பெறப்படுகின்ற அறிவுரைகளுக்கு கேட்ப தொழிற்சாலைகளை ஆய்வு செய்து தொழிற்சாலைகளால் மாசு ஏற்படா வண்ணம் முனைப்பாக கண்காணிக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- தங்களது மண்டல/மாவட்ட அளவில் செயல்படும் அனைத்து தொழிற்சாலைகளும் உரிய இசைவாணையுடன் இயங்க வேண்டும். இதனை அனைத்து பொறியாளர்களும் தங்களது வகுக்கப்பட்டுள்ள எல்லையில் செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- பொது மக்களிடமிருந்தும், விவசாய சங்கங்கள், தொலைகாட்சி மற்றும் நாளிதழில் வரும் சுற்றுச்சூழல் குறித்து புகார்கள் மீது உடனடியான ஆய்வினை மேற்கொண்டு உரிய துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படுகின்ற புகார் மீது துரித நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை தெரியப்படுத்த வேண்டுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- பிளாஸ்டிக் கை பைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை முனைப்பாக கண்காணித்து 40 மைக்ரான் தடிமனுக்கு கீழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக பயன்படுத்தி சாலைகள் அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், 40 மைக்ரான் தடிமனுக்கு கீழ் உள்ள பிளாஸ்டிக் கை பைகள் விற்பனை செய்யும் நிறுவனங்களை உள்ளாட்சி துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

- நான் இதற்கு முன் மேற்கொண்ட ஆய்வில் கூறியவாறு, தமிழகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்வதற்கான அனைத்து பணிகளையும் வரும் காலங்களில் செம்மையாக செயல்படுத்தி மாசில்லா தமிழகத்தை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு, அடுத்த ஆய்வின் போது அதிகாரிகள் ஒவ்வொருவரும் தாங்கள் மேற்கொண்ட பணிகளை இன்னும் விரிவாக விவரிக்க வேண்டும் என மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இறுதியாக உறுப்பினர் செயலர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

தலைவருக்காக
தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9